# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 11, 2023

Weekly E-paper • Novemeber 11, 2023




## ‘தீயோடு விளையாடும் ஆளுநர்கள்’ – உச்ச நீதிமன்றம் கண்டனம்!

சுப. வீரபாண்டியன்

### ஆளுநர்களுக்கு எதிராக மாநில அரசுகளின் அணிவரிசை!

சாரதாதேவி

### அது வன்முறையின் வேறுவடிவம்!

தலையங்கம்

### யாராக இருந்தாலும் நாவடக்கம் வேண்டும்!

காசு. நாகராஜன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● நவம்பர் 11, 2023 Weekly E-paper ● Novemeber 11, 2023

# ‘தீயோடு விளையாடும் ஆளுநர்கள்’ – உச்ச நீதிமன்றம் கண்டனம்!

சுப. வீரபாண்டியன்



தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ஆளுநருக்கு எதிராக தொடுத்த வழக்கு, வரும் 24ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில் இன்னும் இறுதித் தீர்ப்பு வரவில்லை என்றாலும், ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் தன் கடும் கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறது.

பஞ்சாபில் இப்போது ஆளுநராக இருக்கும், முன்னாள் தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்துக்கும், இரண்டு நாட்களுக்கு முன்னால் இப்படி ஒரு கண்டனத்தை உச்ச நீதிமன்றம் வெளிப்படுத்தியது. “ஆளுநர்கள் என்பவர்கள் ஆள்பவர்கள் இல்லை” என்பதை நீதிமன்றம் நினைவுபடுத்தியது!

தலைமை நீதிபதி சந்திரசூட் மற்றும் நீதிபதிகள் இருவர் முன்னிலையில், தமிழ்நாடு அரசு கொடுத்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆளுநர்களுக்குச் சில அதிகாரங்கள் உண்டென்றாலும், சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டமுன் வடிவங்களை (மசோதாக்களை) கிடப்பில் போடும் உரிமை ஆளுநர்களுக்குக் கிடையாது என்பதை உச்ச நீதிமன்றம் உறுதியாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளது.

ஆளுநர்கள் கோப்புகளை அரசுக்குத் திருப்பி அனுப்பலாம். அதுவும் ஒருமுறைதான் அப்படிச் செய்ய முடியும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். இரண்டில் ஒன்றை செய்வதுதான் ஆளுநர்களின் கடமை. இரண்டும் இல்லாமல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அப்படியே போட்டு வைப்பது, ஜனநாயகத்திற்கு எதிரானது. ஆளுநர்கள் தீயோடு விளையாடுகின்றனர் என்று உச்ச நீதிமன்றம் கூடியிருக்கிறது.

> **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசை ஆளுநர்கள் அவமதிப்பார்கள் என்றால், அவர்கள் மக்களையே அவமதிக்கிறார்கள் என்றுதான் பொருள். மக்களையும், அரசையும், அரசியல் அமைப்புச் சட்டத்தையும் அவமதிக்கும் உரிமை எந்தக் கொம்பனுக்கும் இல்லை!!**

இவ்வளவு தெளிவாக உச்ச நீதிமன்றம் தன் கருத்தைப் பதிவு செய்திருப்பதில் நமக்குப் பெரும் மகிழ்ச்சி என்றாலும், இப்படி நீதிமன்றம் அறிவுரை செய்தால்தான் ஆளுநர்கள் தங்கள் கடமையைச் செய்வார்கள் என்ற நிலை ஏற்பட்டிருப்பது தேசத்திற்கே அவமானம் என்றுதான் சொல்ல வேண்டும்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசை ஆளுநர்கள் அவமதிப்பார்கள் என்றால், அவர்கள் மக்களையே அவமதிக்கிறார்கள் என்றுதான் பொருள். மக்களையும், அரசையும், அரசியல் அமைப்புச் சட்டத்தையும் அவமதிக்கும் உரிமை எந்தக் கொம்பனுக்கும் இல்லை!!

# ஆளுநர்களுக்கு எதிராக மாநில அரசுகளின் அணிவரிசை!

**சாரதாதேவி**

டில்லி ஒன்றிய மண்டலம், புதுச்சேரி, மேற்குவங்கம், தெலுங்கானா, தமிழ்நாடு, பஞ்சாப், கேரளா என எங்கெல்லாம் பா.ஜ.க அல்லாத அல்லது பா.ஜ.க, ஆள்பவர்களின் மீது சவாரி செய்ய முடியாத அரசுகள் உள்ளனவோ, அங்கெல்லாம் ஆளுநர்கள் தங்களையே அரசுகளாக நினைத்துக் கொண்டு அத்து மீறுவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்குத் தடையாக இருப்பதும் தொடர்ந்து வருகிறது.

கடந்த 6.11.2023 அன்று ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களுக்கு எதிரான பஞ்சாப் அரசின் வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு “ ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்ல என்பதை உணர வேண்டும்.” என்று குட்டு வைத்திருக்கிறது. மாநிலங்கள் ஆளுநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வது வேதனை என்றும், ஆளுநர் என்பவர் மாநில அரசுக்குக் கட்டுப்பட்டவர் என்றும் அந்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு கருத்து தெரிவித்திருக்கிறது.



10.11.2023 அன்று மீண்டும் அந்த வழக்கை ஆளுநரின் பதிலுக்குப் பின் விசாரிப்பதாகச் சொன்ன அவர், அதோடு தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள் ஆளுநருக்கு எதிராகப் போட்டிருக்கும் வழக்குகளையும் அன்று விசாரிக்க அனுமதித்திருக்கிறார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தெலுங்கானா அரசு தொடர்ந்த வழக்கில் அம்மாநில ஆளுநர் தமிழிசைக்குக் குட்டு விழுந்து, அதன் பின்னர் அவர் சில மசோதாக்களைக் கையெழுத்திட்டு அனுப்பினார். அந்த வழக்கில் மாநிலத்தின் சார்பில் வழக்காடிய துஷ்யந்த் தவே, “பா.ஜ.க. ஆளாத மாநிலங்கள் ஆளுநர்களின் தயவில் இருக்க வேண்டியிருப்பதாகவும், அவர்கள் தாங்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வதாகவும் பதிவு செய்திருக்கிறார்.

தற்போது கேரளாவில் ஆளுநர் ஆரிப் முகமது கான் கடந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 7 மசோதாக்களுக்கு ஒப்புதல் தரவில்லை என்றும், அதில் நிதி மசோதாவும் அடங்கும் எனறு வழக்கு தொடுத்துள்ளது. 3 மசோதாக்கள் 2 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருப்பில் இருப்பதாகவும் அந்த அரசு குறிப்பிட்டுள்ளது. உச்ச நீதிமன்ற அமர்வில், விசாரணையின் போது, மூத்த வழக்கறிஞரும், முன்னாள் அட்டர்னி ஜெனரலுமான கே.கே.வேணுகோபால், “மக்கள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் மீது ஆளுநர் நடவடிக்கை எடுப்பதில்லை. மேலும் அரசு மனு தாக்கல் செய்வது குறித்து அறிக்கை வெளியான பிறகும் கூட, அதை நீதிமன்றத்தில் சந்திப்பதாகக் கூறுகிறார்” எனச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

ஆளுநரின் அதிகாரங்களை வரையறுக்கும் போது, அரசமைப்பின் வரைவுச் சட்டத்தில் இருந்த உறுப்பு 175, ஆளுநர்களுக்கு மசோதாவைத் திருப்பி அனுப்பும் விருப்ப அதிகாரத்தைக் (discretionary powers) கொடுத்தது. எனினும், 1949இல் அரசமைப்புச் சபையில், அந்த உறுப்பு திருத்தப்பட்டு, ஆளுநரின் அதிகாரம் நீக்கப்பட்டது. அண்ணல் அம்பேத்கர், தன் விவாதத்தில், “ ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தில், ஆளுநர் தன் விருப்ப அதிகாரத்தை செலுத்தும் பேச்சுக்கே இடமில்லை.” என்று தெளிவாகக் கூறி உள்ளார்.

உறுப்பு 200 சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் மீது ஆளுநர்கள், ‘எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக’ முடிவெடுக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் ஒருகால அளவை அது சொல்லவில்லை. 1972 இல் நடைபெற்ற துர்கா படா கோஷ் எதிர் மேற்கு வங்கம் வழக்கில், அது, ‘காலம் தாழ்த்தாமல், நடைமுறையில் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக’ முடிவெடுக்க வேண்டும் என்று விளக்கமளிக்கப்பட்டது.

அதுவே 2020 இல் நடைபெற்ற கைஷம் மேகா வழக்கில், ஓய்வுபெற்ற நீதிபதி ரோஹின்டன் நரிமன் ‘நியாயமான காலம்’ என்பது 3 மாதங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நியமனப் பதவியை அனுபவிக்கும் ஆளுநர்கள், இவ்வாறெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளுக்குத் தொல்லைகள் தருவார்கள் என அரசமைப்பை உருவாக்கிய காலத்தில் தலைவர்கள் எதிர்பார்த்து இருப்பார்களா என்ன!

உச்ச நீதிமன்றத்தில் வரிசை கட்டி நிற்கும் வழக்குகள், இந்த சிக்கலுக்கு என்ன தீர்வை தரப்போகின்றன என்று பொறுதிருந்து பார்ப்போம். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அது வன்முறையின் வேறுவடிவம்!

கல்விக் கூடங்களில் நடைபெறும் 'ராக்கிங்' என்பதும் வன்முறையின் வேறுஒரு வடிவம்தான்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் படிக்கக் கல்விக் கூடங்களுக்கு அனுப்புவது அறிவை வளர்க்கவும், ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளவும் என்பது முதன்மையானது. ரவுடியத்தைக் கற்றுக் கொள்ள அல்ல.

அண்மையில் கோவை பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற ராக்கிங் கொடுமை அருவருக்கத் தக்கதாகும்.

அக்கல்லூரி மாணவர் விடுதியில் 225 ஆம் எண் அறையில் நுழைந்த சீனியர் மாணவர்கள், அறையில் இருந்த ஜூனியர் மாணவரிடம் 'மது' அருந்தப் பணம் கேட்டுள்ளனர்.

இல்லை என்று சொன்ன ஜூனியர் மாணவரை மாடியில் இருக்கும் 401 ஆம் எண் அறைக்கு இழுத்துச் சென்று ஐ.டி.கயிறாலும், பெல்ட்டாலும் இரவு முழுவதும் அடித்துத் துன்புறுத்தி இருக்கின்றனர் அந்த சீனியர்கள்.

கல்வியில், ஒழுக்கத்தில் சீனியர்களாக வரவேண்டியவர்கள் ரவுடியத்தில் சீனியராகியிருப்பது வேதனைக்கு உரியது.

இப்பொழுது கொடுமைப் படுத்திய அந்த ஏழு மாணவர்களும் காவலர்களால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்கள் மாணவர்கள் என்ற தகுதியை இழந்து விட்டார்கள்.

உண்மையாகச் சொன்னால் அந்த "இழப்பு" மாணவர்களின் பெற்றோர்களுக்கும் போய்ச்சேர்கிறது.

அதே சமயம் கல்வி நிறுவனங்களும் இதுபோன்ற ராக்கிங் நடைபெறுவதைத் தடுக்க அல்லது நடைபெறாவண்ணம் இருக்க உரிய நடவடிக்கைகளைச் செய்திருக்க வேண்டும்.

மாணவர்கள் நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்பதை அவர்களும் உணர வேண்டும்.

ராக்கிங் என்பது யாருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்வல்ல. பாதிக்கப்படும் மாணவருக்கு அதுவே துன்பத்தைத் தருகிறது.

உணர்ச்சி வசப்பட்டு எதிர்காலத்தை இழப்பதைவிட, உணர்வுப்பூர்வமாக ராக்கிங்கைத் தவிர்ப்பதே நல்லது.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## சேலம் மாவட்டக் கூட்டம்



05-11-2023 அன்று காலை சேலம் மாவட்டம் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கூட்டம் அழகாபுரம் சமுதாய கூடத்தில் மாநில அமைப்புச் செயலாளர் தோழர் ப.புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவர் தோழர் திராவிட செல்வன், மாவட்டப் பொருளாளர் தோழர் திராவிட அரசு முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் தோழர் சுந்தரவதனம் வரவேற்றுப் பேசினார்.மாவட்ட இளைஞர் அணிச்செயலாளர் தோழர் பிரவீன் குமார் நன்றி கூறினார்.

# யாராக இருந்தாலும் நாவடக்கம் வேண்டும்!

**காசு. நாகராஜன்**

தமிழ்நாட்டு அரசியல் களம் பல தலைவர்களைக் கண்டிருக்கிறது. எதிரெதிர் துருவங்களாக இருந்த தலைவர்களின் அரசியல் பயணத்தைச் சந்தித்திருக்கிறது. அவர்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் மிகுந்த கண்ணியத்தை, உயர்ந்த நாகரிகத்தை, ஆகச்சிறந்த மாண்பைக் கடைப்பிடித்து இருக்கிறார்கள்.

திருச்சி திருவரங்கம் மாமாக்களும் மாமிகளும் மனம் குளிர வேண்டும் என்பதற்காகவே தன்னை அக்கிரஹாரத்து அத்திம்பேராகக் கருதிக் கொண்டு அந்த நபர் ஆற்றிய உரை, இல்லையில்லை அந்த நபர் உளறிக் கொட்டியிருக்கும் இரண்டு செய்திகள் முக்கியமானவை. அவற்றை நாம் கவனத்தில் கொள்ளாமல் கடந்து போவது சரியானதல்ல.

ஒன்று தமிழ்நாட்டில் பாஜக ஆட்சி அமைந்தவுடன் பெரியார் சிலைகளை அகற்றுவாராம் இந்த மாஜி போலீஸ்காரர். அடுத்ததாக , பாஜக ஆட்சியின் முதல் கையெழுத்தே இந்து சமய அறநிலையத் துறையின் கடைசி நாளாகும் என்றும் இவர் பேசியிருக்கிறார்.

அறிவியலின் துணையோடு காளைமாடு கூடக்கன்று ஈனும். சேவல் கோழி கூட முட்டை வைக்கும். ஆனால் சமூகநீதித் தமிழ்நாட்டில் பாஜக ஆட்சிக்கு வருவது என்பது முயற்கொம்புதான்.

அந்த நபர் குறிப்பிட்டிருக்கிறபடி பெரியார் சிலை அகற்றம் என்பதை இந்த நபருக்குப் பதிலாக, பீகார் இறக்குமதிக் கும்பலைச் சார்ந்த எந்த ஒரு ராஜாவோ, ரவியோ பேசி இருந்தால் இந்நேரம் தமிழ்நாட்டின் தட்பவெப்பம், வடகிழக்குப் பருவமழை, கார்த்திகை மாதப் பனி அனைத்தையும் கடந்து 100 டிகிரியாகக் கொதித்திருக்கும் என்பதை எல்லோரும் அறிவோம். சம்பந்தப்பட்ட அந்த நபரும் அறிவார்.

ஆனால், பேசியநபர் பார்ப்பனர் அல்லாத ஒரு சூத்திரர் என்பதாலும், ஏதோ தன் வயிற்றுப் பிழைப்புக்காகப் பார்ப்பனர் வீசிஎறிகிற எலும்புத் துண்டைத் தின்றுவிட்டுப் பேசுகிறார் என்பதாலும் அந்த நபரைப் பரிதாபத்தோடு பார்த்துவிட்டு தமிழ்ச் சமூகம் கடந்து போகிறதே இதுதான் பெரியார் பக்குவப்படுத்திய தமிழ்நாடு.

இந்த உளறல் பேர்வழியாகட்டும், இவருக்கு முன்பாக ஒருவர் வேல் ஏந்தி இதே போல் பயணித்தாரே அவராகட்டும், அவருக்கும் முன்னால் ஓர் அம்மா குறுக்கும் நெடுக்குமாக ஓடியோடி இந்தக் கட்சியை வளர்த்தப் படாதபாடு பட்டார்களே அவர்களாகட்டும் இவர்கள் எல்லோரையும் தமிழ் சமூகம் பரிதாபத்திற்குரிய அக்கிரகாரச் சூத்திரர்களாகக் கருதிக் கடந்து போவதுதான் இந்த மண்ணில்,பெரியார் தூவியிருக்கிற பகுத்தறிவு விதையின் விளைச்சல்.



“தன் பேச்சின் தவறுகளைக் கூடத் தவறு என்றோ, பேசிய பொய்க்கு வருத்தமோ தெரிவிக்காமல், பேசி அசிங்கப்பட்ட பின் கூச்சமோ கவலையோ படாமல் மேலும் மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் எனில், ஒரு சராசரி மனிதனுக்கு இருக்கிற மான உணர்ச்சியைக் கூட இழந்துவிட்டு நாக்பூர் சித்பவன் கும்பல் அடிமைகளாகப் பயிற்றுவித்து இருக்கிறதே என்றுதான் நாம் பரிதாபப்படுகிறோம்.”

இந்த நபர் சொல்கிறார் தமிழ்நாடு என்கிற பூமாலையை திமுக பிய்த்துப் போட்டுவிட்டதாம். சொல்லுகிறவர் யார்?

இந்தியா என்கிற பெருநிலப்பரப்பின் சமூக அரசியல் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் சீரழித்து மீளமுடியாத நூறடிப் பள்ளத்தில் மூழ்கடித்திருக்கிற மதவாத, பிரிவினைவாத, வெறுப்பு அரசியலின் பிதாமகன்களுக்குக் கைக்கூலி வேலை பார்க்கிற நபர்.

16 ஆம் நூற்றாண்டு சிவாஜியை 1961இல் காளிகாம்பா கோவிலிலும், 1921 ஆம் ஆண்டு செத்துப்போன சுப்பிரமணிய பாரதியை 1931 ஆம் ஆண்டு ஈரோட்டிலும் சந்தித்த இந்த மானஸ்தன், 1967-ல் ஆட்சிக்கு வந்த திமுக 1962இல் மருதமலைக்கு மின்சாரம் தர மறுத்ததென்று பேசிவிட்டுத் தன் பேச்சின் தவறுகளைக் கூடத் தவறு என்றோ, பேசிய பொய்க்கு வருத்தமோ தெரிவிக்காமல், பேசி அசிங்கப்பட்ட பின் கூச்சமோ கவலையோ படாமல் மேலும் மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் எனில், ஒரு சராசரி மனிதனுக்கு இருக்கிற மான உணர்ச்சியைக் கூட இழந்துவிட்டு நாக்பூர் சித்பவன் கும்பல் அடிமைகளாகப் பயிற்றுவித்து இருக்கிறதே என்றுதான் நாம் பரிதாபப்படுகிறோம்.

தமிழ்நாட்டு அரசியல் களம் பெரியார் என்கிற பேருருவின் முன்னால் அல்லது பின்னால் இருந்து தான் இயங்கும். நான் பார்ப்பனர்த்திதான் என்று சட்டமன்றத்தில் பேசிய அம்மையார் ஜெயலலிதா கூட, அய்யங்கார் பார்ப்பனரான ராஜகோபால ஆச்சாரியின் சிலைக்கு மாலை போடமாட்டார். பெரியாரின் சிலைக்குதான் மாலை போட முடியும்.

எதிர்த்துப் பேசுகிற இடத்தில் நீயும் உனது தொண்டரடிப் பொடியான்களும் தற்காலிகமாக நிற்பதற்குக் கூட இங்கே பெரியார் தான் காரணம். சுருங்கச் சொன்னால் யாகாவாராயினும் நாகாக்க! எச்சரிக்கை!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian